## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு

### அசல் வழக்கு எண். 128/2024

**பி.வா.சா. 2. சுரேஷ்குமார், த/பெ. பொன்னையன்**
**நாள் 12.11.2025**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நத்தம் சர்வே எண் 468 மொத்தம் எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் 46 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. எந்த வருடத்தில் உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நத்தம் சர்வே எண் 468க்கான பழைய சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண்ணம் 468 தான். உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு சொத்தில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அது குறித்து ஆவணங்களை பார்த்தால் தெரியும். எந்த ஆவணத்தை பார்த்தால் விஸ்தீரணம் தெரியவரும் என்றால் அ பதிவேட்டை பார்த்தால் தெரியும். அந்த ஆவணம் எந்த அலுவலகத்தில் உள்ளது என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளது.

நத்தம் சர்வே எண் 468/20ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 266 ச.மீ. உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பு நத்தம் சர்வே எண் 468/20 என்ன வகை நிலத்தினை சேர்ந்தது என்றால் புஞ்சை நில வகையைச் சார்ந்தது. நத்தம் சர்வே எண் 468/20 நிலத்தினை சுற்றியுள்ள சர்வே எண்களின் விபரங்கள் குறித்து தெரியுமா என்றால் வடக்கில் சர்வே எண் 468/19 அது அரசு புறம்போக்கு காலியிடமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. தெற்கு 468/21 அது தெருவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கே 468/18 அது முத்தம்மாள் வகையறாவுக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். கிழக்கு சர்வே எண் 467 அது புஞ்சை நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

எந்த ஆவணத்தின் அடிப்படையில் சர்வே எண் 468/20 நத்தம் புறம்போக்கு நிலமாக வகைப்படுத்தப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. யாருடைய அனுபவத்திலும் இல்லாத நிலம் அரசு புறம்போக்காக வகைப்படுத்தப்படும். மேற்படி நத்தம் சர்வே எண் 468/20க்கான நிலத்திற்கு உரிமை மாற்றம் செய்ய யாரேனும் மனு செய்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சாட்சி சான்றாவனம் 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் எந்த வருடத்தில் தாக்கலான ஆவணங்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு சாட்சியளிக்க எனக்கு அழைப்பானை அனுப்பியது பிரதிவாதி தான் என்றால் சரிதான். வழக்கின் பிரதிவாதிகள் நத்தம் சர்வே எண் 468/20க்கு அருகாமையில் குடியிருந்து வருவதாக வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

நத்தம் சர்வே எண் 468/20க்கு அருகாமையில் வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி நிலமானது வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல யாருடைய அனுபவத்திலும் இல்லை. நத்தம் சர்வே எண் 468/20 ல் அமைந்த சொத்தை வாதி பூர்வீகமாக அனுபவம் செய்து வருகிறார் என்றும், நான் தற்பொழுது பணியில் சேர்ந்ததால் அது குறித்து எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு அழைப்பானை அனுப்பியதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரை சொத்து நாளது தேதி வரை வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு.